ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வைகுண்ட ஏகாதசீ அன்று
சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள்

வேணு : 4 | பிப்ரவரி 1999 | கானம் : 7

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 4 | பிப்ரவரி 1999 | கானம் : 7

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர்-39 | 5 |
| 3. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 20 | 6 |
| 4. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 7 |
| 5. | வேத கதைகள்-21 | 9 |
| 6. | ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 11 | 11 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு - 9 | 16 |
| 8. | மஹாபாரதக் கதைகள் | 25 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 15 | 28 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 42 | 30 |
| 11. | செய்திகள் | 31 |
| 12. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |





மேலே : அத்யயன உத்ஸவத்தில், ஒருநாள்.

கீழே : க்ருத்திகா மண்டல வேத பாராயண பூர்த்தி ஒட்டி நடைபெற்ற கணபாராயணம்.

இடம் : சென்னை ப்ரேமிகபவனம்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ஸ்ரீ ராகம் தாளம் : ஆதி

பல்லவி

***க்ருபா ஸமுத்ர ஸ்ரீநிவாஸ***
***தவ கிங்கரஸ்ய மம ப்ராணேஶ (க்ருபா)***

அனுபல்லவி

***அந்தரங்கபக்த ஹ்ருதயநிவாஸ***
***சந்த்ரஸஹோதரி ஹ்ருதய உல்லாஸ (க்ருபா)***

சரணம்

***ஸித்த சாரண கின்னர ஸேவித***
***ஸ்ரீமந்தஹாஸ சின்மயரூப***
***ஶங்கசக்ரதர ஶங்கபுரீவாஸ***
***ஸ்ரீமுரளீதர அபயப்ரத (க்ருபா)***

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், "ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்" என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. To know more about mission activities and satsang events Visit :

   http://members.tripod.com/~madhuramurali to know more.

   The English Spiritual Magazine "Madhura Murali" Jan '99 issue is now available on Web.





ஸமீபத்தில், நம் ஸ்வாமிகளிடம் ஒரு அன்பர் வந்து, ''தாங்களோ ஸ்மார்த்தர், அதாவது ஶங்கர ஸம்ப்ரதாயத்தில் வந்தவர். ஆனால் தாங்கள், ''பாஷ்யகாரம் பஜே'' என்று ராமானுஜர் மேலும் கீர்த்தனம் பாடுகின்றீர்கள். அதுபோல், த்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த மத்வாச்சார்யர் போன்றவர்களிடமும் பூஜ்யதா பாவத்துடன் உள்ளீர்கள். இது எப்படி சரி!'' என்றார்.

அதற்கு நம் ஸ்வாமிகளோ, ''மதம் என்பது ஒரே பரமாத்மாவை அடைவதற்கு வழிகாட்டுகின்றது. அதில் பல வழிகள் உள்ளன. அனைவரும் ஒரே லக்ஷ்யத்திற்காகத்தான் பாடுபடுகின்றார்கள். அனைவரும் நம்முடைய வேதமார்க்கத்தில் நம்பிக்கையுள்ளவர்கள். அவர்களுடைய மார்க்கங்களிலும் அடையவேண்டியதாக சொல்லும் லக்ஷ்யங்களிலும் வித்யாஸம் இருக்கலாம். அது, அவரவர்களுடைய மனோபாவத்தைப் பொறுத்தது. ஆனால், அவர்கள் அனைவரும் மஹா பராக்ரமசாலிகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. நம்மைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் பெரியவர்கள் அவர்கள். அவர்கள் ஸித்தாந்தத்தில் கருத்து வேறுபாடு இருப்பதால் தனிப்பட்ட விரோதத்தை அத்தகைய மஹாபுருஷர்களிடம் பாராட்டுவதும், அவர்களை நிந்திப்பதும், பாகவத அபசாரமே ஆகும். அவர்கள் பூஜிக்கத்தக்கவர்களே.

ஶங்கர ஸம்ப்ரதாயத்தில் வந்தவர்கள் ராமானுஜரைக் கொண்டாடினால் பரிஹாஸம் செய்கின்றார்கள். ராமானுஜ ஸம்ப்ரதாயத்தில் வந்தவர்கள் ஶங்கரரை கொண்டாடினால் பரிஹாஸம் செய்கின்றார்கள். இதுபோல்தான் மத்வ ஸம்ப்ரதாயத்தை சேர்ந்தவர்களும். ஆனால், இவர்கள் அனைவரும் அல்ப ஸித்திகளைக் காட்டி ஜனங்களை மயக்கும் பாஷாண்டிகளை ஏற்பதில் ஏகமனதாக இருப்பதுதான் மிகவும் ஆஶ்சர்யமாக உள்ளது'' என்று கூறினார்.

இவை மிகவும் ரஸமாக இருப்பதால் எழுதுகிறேன்.

**(தொடரும்)**

**- ஜயந்தி ஜானகிராமன்**

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 20

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரேஸ ஶர்மா வாஜபேயயாஜி

## திருவோணம்

இது மஹாவிஷ்ணுவை தேவதையாகக் கொண்ட உயர்ந்த நக்ஷத்ரம். கஜக்கோல் போல் நீண்டு மூன்று நக்ஷத்ரங்களுடன் ப்ரகாசிப்பதாக வான ஶாஸ்த்ரக்ஞர்கள் கூறுகிறார்கள். ஐப்பசி 4-ந் தேதி முதல் 20-ந் தேதி முடிய நக்ஷத்ரோதய காலத்தில் காணலாம். இந்த நக்ஷத்ரத்தைக் குறித்து வேதத்தில் மிக உயர்வாக கூறப்பட்டுள்ளது. த்ரிவிக்ரம அவதாரரூபியான ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ரூபத்தை இது அடைந்துள்ளது. இந்த நக்ஷத்ரயாகத்தைக் கூறும்பொழுது தன்னைக் குறித்து நல்வார்த்தைகளும் நிந்தாவார்த்தைகளும் வராமலிருப்பதுமான பலத்தை கொடுக்கக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நக்ஷத்ரத்தில் பிறந்தவர்கள் ஐஶ்வர்யம் பொருந்தியவராக இருப்பார்கள். நல்ல மனைவியை உடையவர்களாகவும் இருப்பார்கள். கல்வி அறிவு உடையவர்களாகவும் இருப்பார்கள். இவர்களது வாழ்க்கையில் பணத்தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பே இருக்காது. எப்பாடுபட்டாவது தான் உத்தேசித்த கார்யத்தை ஸாதித்துவிடுவர். உருவ அமைப்பை வைத்து இவர்களை கணக்கிட்டுவிடமுடியாது. நல்ல வார்த்தைகளினால் அனைவரையும் வசப்படுத்திவிடுவர். இவ்வளவு குணங்கள் பொருந்தி இருப்பினும் மகர ராசிக்கு உண்டான நக்ஷத்ரம் ஆனதால், சில ஸமயங்களில் சற்று தர்மத்தில் பற்று குறைவாகவும் காணப்படுவர். சுறுசுறுப்பற்ற தன்மையும் இவர்களுக்கு சற்று உண்டு. குளிர் பொறுக்கமாட்டார்கள். ஒரே இடத்தில் இருப்பதை விட அலைவதில் விருப்பம் கொண்டவர்களாக இருப்பர். வெட்கத்தை விட்டு தன் கார்யத்தை ஸாதித்துக் கொள்வர். பொதுவாக திருவோணம் நக்ஷத்ரம் மிகவும் உயர்வானது.

இவர்கள் சற்று, மற்றவர்கள் விஷயத்தில் தயை கொள்ளும் மனப்பான்மையை வளர்த்துக்கொண்டார்களேயானால் மிகவும் முன்னேறுவார்கள். புத்ர ப்ரதமான புருஷஸூக்தஹோமத்தை திருவோண நக்ஷத்ரத்தில் அனுஷ்டிப்பது மிகவும் உயர்வு என்று கூறப்பட்டுள்ளது. ஜ்வர நிவிர்த்திக்கு பரிஹாரத்தை திருவோணம் நக்ஷத்ரத்தில் செய்தால் உடனே பலன் ஏற்படும். நல்ல பேரும் புகழுமுடைய, முயற்சிக்கும் கார்யங்களில் திருவோண நக்ஷத்ரக்காரர்களை துணை கொண்டால் விரைவில் முன்னேற வாய்ப்பு உண்டு. ■

# பக்தர்களின் கேள்விக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ஒரு ஸமய ப்ரஸங்கர், "நல்ல நேரம் பார்த்தெல்லாம் கல்யாணம் செய்யவேண்டிய அவஶ்யமில்லை. எத்தனையோ நபர்கள், பிற மதத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட, நல்ல நேரம் பார்த்து கல்யாணம் செய்துகொள்கிறார்களா என்ன? அவர்கள் ஸௌக்கியமாகத்தானே இருக்கிறார்கள்" என்று சொல்கிறாரே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : அவரை ஸமய ப்ரசாரம் செய்பவர் என்று கூறுகின்றீர்கள். அவர் அப்படி கூறுவாரேயாயின், "நாம் ஏன் கடவுளை நம்பவோ, ஏற்றுக் கொள்ளவோ வேண்டும்? கடவுளை நம்பாதவர்கள் பலர் ஸௌகர்யமாக உள்ளார்களே" என்று அவரிடம் பதில் கேள்வி கேட்பார்களே. ஆகவே இது நியாயமான வாதம் அல்ல.

முடிந்தவரை நல்ல நேரம் பார்த்துதான் கார்யங்களைச் செய்யவேண்டும்.

*கேள்வி : நீங்கள் சிலருடைய கேள்விகளுக்கு எந்த பதிலும் சொல்வதில்லையே. ஏன்?*

பதில் : அவர்களுக்கு பதிலைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தைவிட கேள்விகள் கேட்பதில்தான் ஆர்வம் உள்ளது. அவர்களிடம் பதில் சொல்வதால் ஒன்றும் பயனில்லை. ஆகவேதான் நான் பதில் சொல்வதில்லை.

*கேள்வி : Weak mindஆக இருப்பவர்களுக்குத்தான் பக்தி வரும் என்கிறார் என் நண்பர். இதற்குத் தங்களின் பதில் என்ன?*

பதில் : It is not so. Even if it is so, what is wrong in it? சிலர் பண விஷயத்தில் வீக்; சிலர் சூதாட்ட விஷயத்தில் வீக்; சிலர் ஆகார விஷயத்தில் வீக்; இப்படியெல்லாம் இருக்கும்பொழுது அவர் சொல்வதுபோல் சிலர் பக்தி விஷயத்தில் வீக்ஆகதான் இருந்தால் என்ன?

*கேள்வி : நாம் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் பல விஷயங்களுக்கு ப்ராரப்தம்தான் காரணம் என்று கூறுகிறோம். இப்படி கூறுவது ஒரு escapism ஆகாதா?*

பதில் : ஒன்றும் ஒன்றும் இரண்டு என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம், நடக்கும் எல்லா செயல்களுக்கும் ப்ராரப்தம்தான் காரணம் என்பது. இது ஒரு தப்பித்துக் கொள்வதற்கான வழி ஆகாது.

*கேள்வி : பாகவத தர்மம்தான் கலியுகத்தில் கதி என்றால், எனக்கு அஷ்டபதி, பஜனை, பாகவதம், ராமாயணம் இவைகள் எல்லாம் தெரியாதே?*

பதில் : ராம நாமத்தையோ அல்லது ஏதாவது ஒரு பகவந்நாமத்தையோ விடாமல் ஜபம் செய்துவந்தாலே போதும்.

*கேள்வி : இறைவனுடைய நாமத்தை ஒரு தரம் ஜபம் செய்தாலே போதும். மோக்ஷத்தை அடைந்துவிடலாம் என்பதை என்னால் நம்பமுடியவில்லையே?*

பதில் : பகவான் இருக்கிறான் என்பதற்கும், மோக்ஷம்தான் அடைய வேண்டிய ஸ்தானம் என்பதற்கும் ஶாஸ்த்ரம்தான் ப்ரமாணம். யுக்தி பூர்வமாக எவ்வளவோ விஷயங்களை ஸ்தாபிக்கலாம்; மறுக்கலாம். ஆனால் அவைகள் எல்லாம் ஸரியாகாது.

அநேக மஹாத்மாக்கள் ஶாஸ்த்ரங்களை அலசி, ஸர்வ ஶாஸ்த்ரங்களின் தீர்மானம் "பகவானுடைய நாமத்தை ஜபம் செய்வதே மோக்ஷத்தை அடைய சிறந்த சுலபமான வழி" என்று ஸித்தாந்தம் செய்துள்ளார்கள். அதுதான் ப்ரமாணம். மஹான்களின் வாக்கிலிருந்து அப்ரமாணமாக ஒரு வார்த்தை கூட வராது.

*கேள்வி : ஸாதனை செய்பவர்கள் ஸாத்வீகமான உணவுகளையே உட்கொள்ளவேண்டுமா?*

பதில் : ஸாதனை செய்பவர்கள் அவஶ்யம் ஸாத்வீகமான உணவுகளையேத் தான் உட்கொள்ள வேண்டும்.

*கேள்வி : என்னுடைய நண்பர் ஒருவர், "குருவி போன்ற பக்ஷிகள் தானியங்களைத்தான் சாப்பிடுகின்றன. ஆனால், அவைகள் அடிக்கடி மைதுனத்தில் ஈடுபடுகின்றன. சிங்கம், புலி, போன்றவைகள் மாம்ஸ உணவுகளையே சாப்பிட்டும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும்தான் ஈடுபடுகின்றன. ஆகவே ஆகாரத்தில் ஒன்றும் இல்லை" என்கின்றார். இதற்கு தங்கள் பதில் என்ன?*

பதில் : ஒவ்வொரு ம்ருகத்திற்கும் உடல் பரிமாணம், பழக்க வழக்கம், வாழ்க்கை முறை மாறுபடும். ஒரு ம்ருகத்திற்கு பொருந்தும் விஷயம் இன்னொன்றுக்கு பொருந்தாது. ஆகவே இது நியாயமான வாதம் அல்ல. ■

# வேத கதைகள் - 21

- தர்மக்ஞர், வாங்கமுக ஸார்வபௌம, மேலக்காவிரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேச ஸாஸ்த்ரிகள்

## ஞானமே உயர்ந்தது

ஒரு ஸமயம், த்யானஸ்ருதி என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு பாட்டனுடைய தந்தையும் உயிருடன் இருந்தான். பாட்டன் தந்தை உயிருடன் இருக்கும்பொழுது அவனுக்கு ''பௌத்ராயனன்'' என்று பெயர். இந்த த்யானஸ்ருதி, யாகம், தானம், இவைகளை மிகவும் ஶ்ரத்தையுடன் செய்துவந்தான். ''பசியுடன் ஒருவரும் துன்பப்படக்கூடாது, எல்லோரும் நன்கு உண்டு மகிழ்ச்சியுடன் வாழவேண்டும்'' என்று எண்ணி, எல்லா இடத்திலும் அன்ன சத்திரங்கள் அமைத்தான். அவன் செய்த புண்ணியங்களுக்கு அளவே இல்லை. நாம் நல்ல கர்மாக்களை ஶ்ரத்தையுடன் செய்தால் மனது பரிசுத்தமாக ஆகி தத்துவ விசாரங்களில் ஈடுபாடு ஏற்படும். இந்த அரசன் நல்ல கார்யங்களை நன்கு செய்தும்கூட அவன் மனது தத்துவ விசாரங்களில் ஈடுபடவில்லை.

அவன் மனதை தத்துவ விசாரங்களில் ஈடுபடுத்தவேண்டும் என்று முனிவர்களும், தேவர்களும் எண்ணினர். தினமும் அரசன், மேல்மாடியில் படுப்பது வழக்கம். இந்த அரசனை தத்துவ விசாரங்களில் ஈடுபடுத்த முனிவர்களும், தேவர்களும் அன்னபக்ஷி உருவம் எடுத்து அரசன் படுத்திருக்கும் இடத்திற்குமேல் பறந்து சென்றனர். கர்மமார்க்கத்தைக் காட்டிலும் ஞானமார்க்கம்தான் உயர்ந்தது. கர்மாவின் பயன் பரம்பொருளை அறிவதுதான் என்று இந்த அரசனுக்கு உணர்த்த அன்னபக்ஷி உருவம் எடுத்து இவர்கள் வந்தனர்.

முன் செல்லும் அன்னபக்ஷியைப் பார்த்து பின்னால் வரும் அன்னபக்ஷி பேசத் தொடங்கியது. ''இந்த அரசனுடைய நற்கார்யங்களில் ஏற்பட்ட புண்ணியமானது ஒரு ஒளியாக உடலிலிருந்து சொர்க்கம்வரை நீண்டு இருக்கிறது. வேகமாகச் செல்லும் நீ, அந்த அரசனின் ஒளியில் கலந்தால் உன் உடல் சாம்பலாகிவிடும். ஆதலால் விலகிச் செல்வாயாக!'' என்று கூறியது.

இங்கு பின்வரும் அன்னபக்ஷியானது, முன் செல்லும் அன்னபக்ஷியைப் பார்த்து, "நல்ல கண்ணுவனே" என்றழைத்தது. இது ஒரு கேலி வார்த்தையாகும். "இந்த அரசனின் ஒளியில் கலந்தால் சாம்பலாகி விடுவோம் என்று தெரியாமல் செல்கிறாய். உனக்கு நல்ல கண் இருந்தும் பயனில்லை" என்பது இதன் கருத்து. இதைக் கேட்டு முன் சென்ற அன்னபக்ஷியானது தன்னை கேலி செய்த அன்னபக்ஷியைப் பார்த்து, "வண்டியிலேயே செல்லும் ரைக்வர் என்ற மஹான் இருக்கிறார். அவரைக் காட்டிலும் இந்த அரசன் எந்த விதத்தில் உயர்ந்தவன்?" என்றது. மேலும் தொடர்ந்து பேசினது.

"அந்த ரைக்வர் ப்ராணோபாசனம் செய்து எல்லா ஸித்தியும் பெற்றவர். இவர் அறிவில் உலகிலுள்ள மற்ற எல்லா அறிவும் அடங்கிவிடுகிறது. இதற்கு ஒரு உதாரணம் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. பண்டைய காலங்களில் சூதாட்டங்கள் பலவகைப்படும். அவைகளில் ஒரு சூதாட்டத்தில் நான்கு காய்கள் உண்டு. அவைகளுக்கு க்ருதம், த்ரேதா, த்வாபுரம், கலி என்று பெயர்கள். க்ருதம் என்ற காயில் நான்கு, த்ரேதா என்ற காயில் மூன்று, த்வாபரம் என்ற காயில் இரண்டு, கலி என்ற காயில் ஒன்று என்று புள்ளிகள் இருக்கும். அவைகளில் த்வாபரம் என்ற காயை ஜயித்தால் கலி என்ற காயையும் ஜயித்ததாகிவிடும். த்ரேதா என்ற காயை ஜயித்தால், த்வாபரம், கலி இரண்டையும் ஜயித்தாகிவிடும். க்ருதத்தை ஜயித்தால் த்ரேதா, த்வாபரம், கலி மூன்றையும் ஜயித்ததாகிவிடும். இவ்விதம் க்ருதத்தில் எப்படி மற்ற மூன்றும் அடங்கியுள்ளதோ அவ்விதம் ரைக்வருடைய அறிவில் எல்லா அறிவும் அடங்கியுள்ளது. ஆதலால் இந்த அரசன் ரைக்வரைக் காட்டிலும் எந்தவிதத்திலும் உயர்ந்தவனில்லை" என்று கூறி பறவைகள் பறந்து சென்றன.

இதைக் கேட்ட அரசனுக்கு, ரைக்வரைக் கண்டிபிடித்து அவரிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. மறுநாள் மந்திரியை அழைத்து ரைக்வரைத் தேடிவருமாறு அனுப்பினான். மந்திரியும் பல இடங்களில் ரைக்வரைத் தேடிக்கண்டுபிடிக்க முடியாமல் திரும்பினான். ப்ராஹ்மணர்கள் எங்கு இருக்கமாட்டார்களோ அங்கு தேடி இருக்கிறாய். எங்கு இருப்பார்களோ அங்குபோய் தேடுவாயாக என்று மறுபடியும் மந்திரியை அரசன் அனுப்பினான். மந்திரியும் அவ்விதமாகத் தேடி, ரைக்வரை கண்டுபிடித்து அரசனிடம் அழைத்துவந்தான். அரசனும் தன்னிடமுள்ள உயர்ந்த பொருள்கள், தன் மகள் என்று எல்லாவற்றையும் அவருக்கு ஸமர்ப்பணம் செய்து அவரிடமிருந்து உபதேசம் பெற்று இன்புற்று வாழ்ந்தான்.

இந்த வரலாறு ஸாமவேதத்தில் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி வ்யாஸர் எழுதிய ப்ரஹ்மஸூத்ரங்களிலும், "ஶாகஸ்ய" என்று ஆரம்பிக்கிற அபஸூத்ராதிகரணம் என்ற அதிகரணத்திலும் கூறப்பட்டிருக்கிறது. கர்மாக்களைக் காட்டிலும் ஞானந்தான் உயர்ந்தது. நாம் கர்மாக்களை ஒழுங்காகச் செய்தால் பெரியோர்கள் நம்மை ஞானப்பார்வையில் அழைத்துச் செல்வார்கள். தத்வஞானத்தில் மற்ற எல்லா ஞானங்களும் அடங்கியுள்ளன.

நல்ல குருவை அண்டினால்தான் நமக்கு நல்ல அறிவு ஏற்படும். குருவை நாம் தான் தேடிச் செல்லவேண்டும். ஒரு அரசன் தன்னுடைய எல்லாச் செல்வம், பெண் இவை யாவற்றையும் அர்ப்பணம் செய்து அவரிடம் உபதேசம் பெற்றான் என்பதால் ரைக்வர் அறிந்த விஷயம் எவ்வளவு உயர்ந்தது என்றும், அப்படிப்பட்ட அறிவுக்கடலான அவர் எவ்வளவு உயர்ந்தவர் என்பது போன்ற பல விஷயங்கள் நமக்கு நன்கு விளங்குகின்றன.

இந்த வேதத்தில் கூறப்பட்ட விஷயத்தை மனதில் வைத்து பகவான் கண்ணனும் கீதையில், "யாவனர்த்தவதபானே" என்ற ஸ்லோகத்தில் ஞானத்தில் எல்லாம் அடங்கும் என்று கூறியிருக்கிறார். ■

---

*சக்தி உள்ளவன் கோபப்பட்டால் தன் எதிரியை அவன் அழிக்கிறான். ஆனால் அவனுக்கும் அதே கதி பிறகு ஏற்படும். சக்தியில்லாதவன் கோபப்பட்டால், அவனுடைய எதிரியினால் அவனுக்கு மரணம் நேரிடுகிறது.*

**- மஹாபாரதம்**

This issue Photos by :
Sri R. Kalyanakrishnan

# ஸ்ரீ நாரத பக்தி ஸூத்ரம் - 11

- ப்ரஹ்மஸ்ரீ பாலக்ருஷ்ண ஶாஸ்த்ரிகள்

பக்தி இல்லாத ஞானமோ, ஞானமில்லாத பக்தியோ சிறப்படைவதில்லை. 'ஸ்ரீ க்ருஷ்ணனை ப்ரியதமனாகக்கொண்டு அவனிடம் அன்பு பூண்ட க்ருஷ்ணப்ரேமஸ்வரூபிணிகளான கோபிகைகளுக்கு பகவத் தத்வஞானம் இருந்ததா?' எனும் ஶம்ஶயத்தை போக்குகிறார் அடுத்த ஸூத்ரத்தில்.

*தத்ராபி ந மாஹாத்ம்ய விஸ்ம்ருத்யவாத : ॥ 22*

அந்த கோபிகைகளின் பக்தியிலும் பகவானின் மாஹாத்ம்ய ஞானம் மறந்தது எனும் குற்றமில்லை.

*தத்விஹீனம் ஜாராணாமிவ ॥ 23*

மாஹாத்ம்ய ஞானம் இல்லாத அன்பு ஜாரர்களின் (வ்யாபிசாரிகளின்) அன்பு போன்றதே.

ப்ரேமஸ்வரூபிணிகளான கோபிகைகளிடத்தில் கண்ணனிடம் அன்பு ஒன்றே ப்ரதானமாய் இருந்தது. அதனால் அவர்களுக்கு, கண்ணனின் மாஹாத்ம்யம், ப்ரபாவம், அவதார ரஹஸ்யம் தெரியாது என்பதல்ல. அவைகள் த்ருடமாய் தெரிந்திருந்தபோதும் அவைகளுக்கு ப்ராதான்யம் கொடுக்கவில்லை. அவனது மஹிமை தெரிந்தே அவனிடம் நெருங்கினர். அவனிடம் அளவு கடந்த அன்பு கொண்ட நிலையிலும் அவனது அவதார ரஹஸ்யமும், மாஹாத்ம்யமும் அவர்களது உள்ளத்தில் ஆழமாய் பதிந்தே இருந்தது.

ஸ்ரீ க்ருஷ்ணனின் லீலையில் மோஹித்த ப்ரஹ்மதேவன் க்ருஷ்ணனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதித்தது, கொடிய ஸர்ப்பமான காளீயனை அடக்கியது, காட்டுத்தீயை பானம் செய்தது, கோவர்த்தனமலையைக் குடையாய் தாங்கி மழையிலிருந்து கோகுலத்தைக் காத்து தேவேந்திரனின் கர்வத்தை அடக்கி திருவடியில் விழச்செய்தது, வருணனால் பூஜிக்கப்பட்டது, வைகுண்டத்தையே ஆயர்களுக்குக் காட்டியது முதலிய ஸம்பவங்களை நேரில் கண்டவர்கள் ஆயிற்றே கோபிகைகள். அவனது மஹிமையும், பெருமையும் எப்படி தெரியாமல் போகும்!

*"ந கலு கோபிகா நந்தனோ பவானகில தேஹினாமந்தராத்மத்ருக் ॥
விகனஸார்த்திதோ விச்வகுப்தயே ஸக உதேயிவான் ஸாத்வதாம் குலே ॥"*

**- கோபிகாகீதம்**

"நீ யசோதையின் பிள்ளையாக மட்டும் இல்லை. எல்லா ப்ராணிகளுக்கும் ஜீவஸாக்ஷியாய் இருக்கக் கூடியவர். ப்ரஹ்மாவினால் வேண்டப்பட்டு ஜகத்ரக்ஷணத்துக்காக யாதவகுலத்தில் தோன்றினாய்" என்றும்,

*"வ்யக்தம் பவான் வ்ரஜபயார்த்திஹராபிஜாதோ
தேவோ யதாதி புருஷ: ஸுரலோக கோப்தா ॥"*

**- ப்ரணயகீதம்**

"தேவகணங்களை காக்கும் ஆதிபுருஷனே! வ்ரஜமண்டலத்தின் பயத்தையும், துயரத்தையும் துடைப்பதற்காக அவதரித்துள்ளீர்" என்றும்,

*"ப்ரேஷ்டோ பவாம்ஸ்தனுப்ருதாம் கில பந்துராத்மா"*

**- ப்ரணயகீதம்**

"ஸமஸ்த ஜீவன்களுக்கும் ப்ரியதமனான பந்துவும், ஆத்மாவும் நீ தானே" என்றும் பல இடங்களிலும் கோபிகைகள் சொல்லாலேயே அவர்களது பகவத் தத்வஞானம் அனுபவிக்கக் கிடைப்பதால் அவர்களது பகவத் மாஹாத்ம்ய ஞானத்துக்கு எந்த குறையுமில்லை.

மேலும், "பரதத்வஞானம் இல்லாமல்போகுமேயானால் அது சுத்தமான ப்ரேமையாக ஆகாது. அது ஜாரர்களான ஆண் பெண்களுக்குள் ஏற்படும் ஆசைக்கு ஸமமானதே" என்று குறிப்பிடும் நாரதர், ப்ரேமைக்கும், காமத்துக்கும் உள்ள வைலக்ஷண்யத்தை காட்டுகிறார். ஜாரர்களின் உறவில் தூய்மை இருப்பதில்லை. தன்னலமே முன் நிற்கிறது. புலன்களில் இன்பமே தலைதூக்கி நிற்கிறது. எனவே அது காமம் என்றே சொல்லப்படுகிறது. அங்கு ப்ரேமை எனும் சொல்லை பயன்படுத்தலாகாது. ஜாரர்களின் ஆசை அசுத்தமானது. தூஷிக்கத்தக்கது. ஆனால், கோபிகைகளிடம் தன்னலமற்ற, தூய்மையான அன்பு ஒன்றையே பார்க்கின்றோம். இந்த்ரிய ஸுகங்களுக்கு எள்ளளவும் அவர்களிடம் இடமில்லை. பகவானின் மாஹாத்ம்யத்தை உணர்ந்தவர்கள் அவர்கள். அவன் எத்தகைய ப்ரபு என்பதை உணர்ந்த நிலையிலேயே, "ஸகே! அன்பா!" என்றழைத்து அவனிடம் மனதால் ஈடுபட்டனர்.

ஸ்த்ரீ - புருஷ பேதத்தை ஒழித்த ப்ரஹ்மநிஷ்டரான ஶுகரும், நைஷ்டிகப்ரஹ்மசாரியான பீஷ்மரும், ப்ரஹ்மாதி தேவர்களும், காமனைப் பொசுக்கிய முக்கண்ணனும், உத்தவன் முதலான பக்த சிரோண்மணிகளும் கோபிகைகளின் ப்ரேம வைசித்ரியத்தை விதவிதமாய் அனுபவித்து கொண்டாடுகின்றனர்.

*நாஸ்த்யேவ தஸ்மின் தத்ஸுகஸுகித்வம் 24 ॥*

ஜாரர்களின் ப்ரியத்தில் மற்றவர் ஸுகத்தில், தான் ஸுகப்படுவது என்பது இருப்பதில்லை.

கோபிகைகளின் ப்ரேமையின் லக்ஷணமே வ்யதிரேகமாய் இந்த ஸூத்ரத்தில் காட்டப்படுகிறது. வ்ரஜராஜநந்தனிடம் ஈடுபட்ட கோபிகைகளின் ப்ரேமையை விவரிக்கப்புகுந்த நாரதர், காமத்துக்கும் ப்ரேமைக்கும் உள்ள வேறுபாட்டை இங்கு காட்டுகிறார். தன் ஸுகத்துக்காக மற்றவர் என்பது காமத்தின் லக்ஷணம். மற்றவர் ஸுகத்துக்காகதான் என்பது ப்ரேமையின் லக்ஷணம்.

*ஸ்வார்தாய ப்ரியஸர்வஸ்வாகர்ஷணம் காமலக்ஷணம் ।*
*ப்ரியாய ஸ்வார்தஸர்வஸ்வப்ரதானம் ப்ரேமலக்ஷணம் ॥*

''தன் ஸுகத்திற்காக ப்ரியனின் அனைத்தையும் ஸ்வீகரித்துக் கொள்வது காமத்தின் லக்ஷணம். ப்ரியனின் ஸுகத்திற்காக தனது ஸர்வத்தையும் அர்பிப்பது ப்ரேமையின் லக்ஷணம்'' என்று காமத்திற்கும் ப்ரேமைக்கும் வைலக்ஷண்யம் காட்டப்படுகிறது. ப்ரேமையின் இந்த லக்ஷணமே ''தத்ஸுகஸுகித்வம்'' என்று சுருக்கமாய் சொல்லப்படுகிறது. மற்றவர் ஸுகத்திலேயே தான் ஸுகப்படுவதே தத்ஸுகஸுகித்வம். இதில் தன்ஸுகம் என்று தனித்து இருப்பதில்லை. தன்னலத்துக்கு துளியும் இடமில்லை. அங்கஸங்க இச்சைக்கோ புலன்களின் ப்ரீதிக்கோ இடமில்லை. ப்ரியனின் ஸுகத்திலேயே தானும் ஸுகப்பட வைக்கிறது.

காட்டிலுள்ள கஷ்டங்கள் அனைத்தையும் விவரித்து காட்டுக்கு வரவேண்டாமென ஸ்ரீராமனே தடுத்தாலும், ஸீதாதேவி தன்ஸுகம் எதையும் தனித்து விரும்பாமல், அனைத்தையும் துறந்து, ஸ்ரீராமன் ஸேவையிலேயே தானும் ஸுகப்பட்டாள்.

கண்ணனை பிரிந்து துடிக்கும் கோபிகைகளும்,

*''யத்தே ஸுஜாதசரணாம் புருஹம் ஸ்தனேஷு*
*பீதா: ஶனை: ப்ரிய ததீமஹி கர்கஶேஷு ।*
*தேனாடவீமடஸி தத் வ்யததே ந கிம்ஸ்வித்*
*கூர்பாதிபிர் ப்ரமதி தீர் பவதாயுஷாம் ந : ॥''*

- கோபிகாகீதம்

"அன்பா! அழகான தாமரை போன்ற, ம்ருதுவான எந்த உனது சரணங்களுக்கு நோவு ஏற்பட்டுவிடுமோ என தயங்கி, மெள்ள எங்களது மார்பில் தரித்துக்கொள்கிறோமோ, அந்த சரணங்களால் காட்டில் அலைகிறாயே ! கற்களாலும், முட்களாலும் உனது திருவடி வாடுமே என்றுதான் உம்மிடம் உயிர் வைத்துள்ள நாங்கள் வருந்துகிறோம்" என்கின்றனர்.

தன்ஸுகமே பெரிதாக விரும்பப்படும் ஜாரர்களின் சேர்த்தியில் இந்த தத்ஸுகஸுகித்வம் இருப்பதில்லை. அதில் காமமே இருக்கிறது. காமமே, தன்னலத்துக்கு அடிப்படை காரணம். புலன்களால் அனுபவிக்கப்படும் இன்பம் அனைத்துமே காமம் தான்.

*"இந்த்ரியாணாம் ப்ரீதிரேவ காம இத்யபிதீயதே"*

**- ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

"புலன்களின் ப்ரீதியே காமம் என சொல்லப்படுகிறது" என்று ஸ்ரீ க்ருஷ்ணபக்திரஸோதயத்தில் எனது குருநாதர் ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் குறிப்பிடுகிறார். காமவசப்பட்டு தன் உடல்ஸுகம், இந்த்ரியஸுகம் இவற்றிற்காகவே ப்ரீதி காட்டுபவர்களால் ப்ரேமானந்தம் உணரப்படுவதில்லை. அந்த காமத்துக்கு பகவான் கிடைப்பதில்லை. ஸ்ரீராமனிடம் காமவசப்பட்ட சூர்ப்பணகைக்கு ராமன் கிடைக்கவில்லை. ஆனால் ஸ்ரீராமனிடம் ப்ரேமை கொண்ட முனிவர்கள், கோபிகைகளாக பிறந்து பகவானை அடையப்பெற்றார்கள். தங்களது மனது, வாக்கு, புத்தி, ஸரீரம், யௌவனம், பொருள், ப்ராணன் அனைத்தையும் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கே அர்ப்பித்து அவனது ஸுகத்துக்காகவே வாழ்ந்தனர் கோபிகைகள். ஸ்ரீ க்ருஷ்ணப்ரீதியே அவர்களது லக்ஷ்யமாயிருந்தது. ஸ்ரீ க்ருஷ்ணனின் சொல்லே அவர்களுக்கு வேதமாய் இருந்தது.

எனவே, எல்லாவற்றையும் பகவானுக்கே அர்ப்பித்தல், கணநேரம் அவனை மறக்கநேர்ந்தாலும் மாளாத்துயர்கொள்ளுதல், ஸ்ரீ க்ருஷ்ண மாஹாத்ம்யஞானம், தத்ஸுகஸுகித்வம் இவை நிறைந்த கோபிகைகளின் ப்ரேமையை யார் தான் விவரிக்க இயலும்?. சிறிது ஸ்மரித்து நமது மனதையும், வாக்கையும் தூய்மைப்படுத்தி நம்மை பாவனமாக்கிக் கொள்கிறோம்.

(தொடரும்)

# எந்தரோ மஹானுபாவுலு - 9

ஒரு ஸமயம், ஸ்ரீ விஜயேந்த்ரஸ்வாமிகளை காசிகங்காபண்டிதர் என்பவர் வாதத்திற்கு அழைத்து ஸ்வாமிகளிடம் தோல்வியுற்றார். ஸ்வாமிகள் பண்டிதரைப் பார்த்து, ''என்னைக் கொல்ல நீங்கள் கொடிய விஷத்தை மறைத்து வைத்துள்ளீரே, அதை எனக்குத் தாரும். நான் சாப்பிடுகிறேன்'' என்றார். பண்டிதர், ஸ்வாமிகளது அப்ரோக்ஷ ஞானத்தைக் கண்டு நடுநடுங்கி, தான் அந்த காரியத்தை செய்யப்போவதில்லை என்றும், அபசாரத்துக்கு மன்னிக்கவேண்டும் என்று கூறி, காலில் விழுந்து மன்றாடினார். ஆனால், ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் அவரிடமிருந்து விஷத்தை வாங்கிக் குடித்துவிட்டார்.

மக்கள் ஹா! ஹா! என்று கூச்சலிட்டனர். ஸ்வாமிகளின் உடல் கறுக்க ஆரம்பித்தது. அவர் பகவத் த்யானத்துடன் ஸ்ரீ நரஸிம்ஹாஷ்டகம் பாட உடனே விஷம் இறங்கி ஸ்வாமிகள் முன்னைவிட அதிக தேஜஸ்ஸுடன் ஜ்வலித்தார். ஸ்வாமிகள், அன்று பூஜையின்பொழுது தாம் பூஜை செய்யும் ஸ்ரீ நரஸிம்ஹ விக்ரஹத்தை எடுத்து பக்தர்களுக்குக் காட்டினார். அந்த விக்ரஹத்தின் கழுத்து நீலமாயிருந்தது. பக்தருக்காக பரமன், தானே விஷத்தை உண்ட லீலையை ஜனங்கள் கண்டு வியந்தனர். அந்த ஸ்ரீ நரஸிம்ஹ விக்ரஹம் இன்றும் ஸ்ரீ ராகவேந்த்ரஸ்வாமிகளின் பீடத்தில் வரும் மடாதிபதியிடம் பூஜையில் இருக்கிறது.

ஒரு நாள் ஸ்வாமிகள், காலையில் ப்ரவாஹமாக ப்ரவசனம் செய்து கொண்டிருந்தபொழுது மடத்தின் ஸர்வாதிகாரி பரபரப்புடன் ஓடிவந்தார். பதட்டத்தில் அவருக்குக் கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. பேசவும் நாக்கு எழவில்லை. ஸ்வாமிகள் அவரைப் பார்த்து, ''என்ன! நூல்நிலையத்திலுள்ள புத்தகங்கள் களவாடப்பட்டனவா? கவலை வேண்டாம். மத்தியானம் இது பற்றி யோசிக்கலாம்'' என்று கூறிவிட்டு பூஜையை தொடர்ந்து முடித்து தீர்த்த ப்ரசாதங்கள் அமைதியுடன் வழங்கினார். சிறிது ஓய்வுக்குப் பிறகு மாலை மண்டபத்திற்கு ஸ்வாமிகள் எழுந்தருளினார்.

இதற்குள் புத்தகங்கள் காணாமல் போன விஷயம் ஊரெங்கும் பரவி ஏராளமான ஜனங்கள் மடத்துக்கு வந்து சேர்ந்தனர். ஸ்வாமிகள் என்ன செய்வார் என்று பார்ப்பதில் ஜனங்களுக்கு ஆவல். அப்பொழுது ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதரும் அங்கு வந்து சேர்ந்தார். வேதனையுடன் ஸ்வாமிகளிடம் புத்தகம் களவாடப்பட்டது பற்றி விசாரித்தார்.

ஸ்வாமிகள் சிரித்துக் கொண்டே, "தீக்ஷிதரே ! ஏன் கவலைப்படுகிறீர்கள். புத்தகங்கள் போனால் உங்களுக்கு நல்லதுதானே. தங்களுடைய தாக்குதல்களுக்கு பதில் சொல்லக்கூடிய என் நூல்கள் இல்லாதுபோனால் உங்களுக்குதானே வெற்றி" என்று கூறி விஷமமாக சிரித்தார். ஸ்வாமிகள் தன்னிடம் விளையாட்டாக தான் பேசுகிறார் என்று புரிந்துகொண்ட தீக்ஷிதரும் விளையாட்டாக, "அப்படியானால் என் ஜெயக்கொடிதான் இனி உயரே பறக்கும்" என்று சொல்ல, அதற்கு ஸ்வாமிகள், "நான் அப்படி விட்டுவிடுவேனா?. என்னுடைய நூல்கள் என் மனதில் உள்ளன. சீக்கிரம் அவைகளை எழுதி மறுபடியும் வெளிக்கொண்டு வந்துவிடுவேன். அப்பொழுது என்ன செய்வீர்?" என்றார். தீக்ஷிதரும் உடனே, "ஸ்வாமி! தங்கள் மஹிமையை நான் அறியேனா?. தாங்கள் விளையாட்டாகக் கூறியதால் நானும் விளையாட்டாகப் பதில் சொன்னேன். அவ்வளவுதான். என் வருத்தம் ஹ்ருதயபூர்வமானது என்பதை தாங்கள் அறியாததா என்ன?" என்றார்.

ஒரு ஸமயம், தீக்ஷிதர் சில கண்டன நூல்களை எழுதி ரஹஸ்யமாக வைத்திருந்தார். இதை அறிந்த ஸ்ரீ விஜயீந்த்ரஸ்வாமிகள், ஆகர்ஷண வித்யையால் அவைகளை வரவழைத்து, வாசித்து, அந்த நூல்களுக்கு பதில் நூல்களை எழுதி தீக்ஷிதருக்கு அனுப்ப, தீக்ஷிதர் அசந்து போய்விட்டார். தீக்ஷிதரின் நூல்களை எடுத்த இடத்திலேயே எடுத்த அடையாளம்கூடத் தெரியாமல் வைத்தும்விட்டார். இதற்கு "விஸர்ஜனவித்யை" என்று பெயர். அந்த வித்யையை நேரில் காணவே தீக்ஷிதர், ஸ்வாமிகளிடம் வந்தார். ஸ்வாமிகளும், "எனக்கு ஆகர்ஷணவித்யை தெரியும். அந்த வித்யையால் களவுபோன புத்தகங்களை வரவழைப்பேன். அதை கண்ணாரக் கண்டு ஆனந்திக்கவேண்டும் என்றுதானே நீங்கள் இங்கு வந்துள்ளீர்" என வினவ, தீக்ஷிதர் ஸ்வாமிகளிடம், "ஸ்வாமி! என் மனதிலும் புகுந்து விளையாடும் தங்கள் பெருமைதான் என்னே!" என வியந்தார்.

ஸ்வாமிகள் அதற்கு, "பரதைவமான பரமேஶ்வரன் என் மனதில் புகுந்து அனுக்ரஹிக்கிறார். எனவே, இது அவருடைய பெருமைதான்" என்று வினயத்துடன் கூறினார். பிறகு "உங்களிஷ்டப்படியே எல்லாம் நடக்கும் பாருங்கள்" என்று கூறி, மந்த்ரம் ஜபிக்கத் தொடங்கி த்யானத்தில் ஆழ்ந்தார். திடீரென்று ஆகாயத்தில் இடி இடித்தாற்போல ஒரு சப்தம். எல்லோரும் மேலே நோக்க, ஆச்சரியமாக ஒரு பெட்டி மெல்ல மெல்ல இறங்கி ஸ்வாமிகள் முன் தரையை தட்டியது. சீடர்கள், "இந்தப் பெட்டிதான்! இந்தப் பெட்டிதான்" எனக் கூவினர். ஸ்வாமிகள் கண்திறந்து பார்த்து, சிரித்துக்கொண்டே, "பெட்டி அதேதான், உள்ளே நம்முடைய புத்தகங்கள் உள்ளனவா என்றும் பாருங்கள்!" என்றார்.



சீடர்கள் பெட்டியைத் திறந்து சோதித்தனர். ஸ்வாமிகள் அருளிச் செய்த 101 நூல்களும் உள்ளே பத்திரமாக இருந்தன. தீக்ஷிதர், ஸ்வாமிகளை வணங்கி விடைபெற்றார்.

ஒரு ஸ்ரீ மத்வ நவமி அன்று, மடத்தில் கோலாஹலமாக உத்ஸவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏராளமான ஜனங்கள் குழுமி இருந்தனர். தாஸர்கள் பதங்களின் கானம், திவ்யநாம பஜனை, வீதி பஜனை முடிந்து ஸ்ரீமத்வாச்சாரியரின் திருவுருவப்படம் ரதத்தில் மடம் திரும்பியது. ஸ்ரீ விஜயீந்த்ரஸ்வாமிகள், ஸ்ரீமூலராமன் பூஜைக்குத் தயாராக அமர்ந்தார். பூர்வாங்க பூஜைகள் முடிந்து மஹாபிஷேகம் ஆரம்பிக்கவேண்டிய ஸமயம், ஸ்வாமிகள் கண்களை மூடிக்கொண்டு தன் வயிற்றை தடவிக் கொண்டிருந்தார். ஏனென்று ஒருவருக்கும் புரியவில்லை.

ஒரு நொடியில் ஸ்வாமிகளின் வயிறு உப்பி ஒரு பெரிய தவலை அளவு ஆகிவிட்டது. இனி வயிறுவெடிக்க வேண்டியதுதான் பாக்கி. பக்தர்கள் நெருங்கி ஹா! ஹா! என அலறினர். ஸ்வாமிகள் சிறிதும் பதறாமல் அபயஹஸ்தம் காட்டி தம் சீடனை அழைத்து, உடனே தோட்டத்துக்குச் சென்று வாழைக்கன்றுகளை ஒன்று ஒன்றாக நடுவில் வெட்டி விடு என்றார். அவனும் ஓடிப் போய் அவ்வாறே செய்தான். வெட்டிய உடனேயே வெட்டப்பட்ட வாழைக்கன்றுகளிலிருந்து குபுகுபுவென்று நீர் மேலே எழுந்து தோட்டம் முழுவதும் பாய்ந்தது. ஸ்வாமிகள் வயிறும் உபாதை நீங்கி முன்போல் ஆகிவிட்டது. பூஜை முடிந்து தீர்த்தப்ரஸாதம் ஆயிற்று.

மாலை மறுபடியும் ஸபை கூடியது. பக்தர்கள் காலையில் நடந்த விஷயத்தின் உட்கருத்தை அறிய ஆவலாயிருந்ததை அறிந்த ஸ்வாமிகள் தானாகவே விவரம் கூறலானார். "என்னைக் கொல்லவேணும் என்ற எண்ணத்துடன், ஒருவன் மஹாமக குளத்தில் மூழ்கியிருந்தபடி துர்மந்திர ஜபங்களை செய்துவிட்டு, அதன் பலனாக நான் இறப்பதை நேரில் காண அவனும் காலை பூஜைவேளையில், உங்களில் ஒருவனாக உட்கார்ந்து கொண்டிருந்தான். முடிவில் அவன் எண்ணம் வீணானதும் நடுநடுங்கி நீங்களெல்லோரும் தோட்டத்துக்கு ஓடியபோது உங்களோடு அவனும் ஓடி விட்டான். என் உபாஸனாமூர்த்தியான ஸ்ரீராமன் ஸமுத்திரத்தையே வற்ற அடிப்பேன் என்று சொன்னவனில்லையா? என் வயிற்றை வற்ற அடிப்பது அவனுக்குப் பெரிய காரியமா என்ன? அவன் அருளால் எனக்கு வந்த உபாதை நீங்கி விட்டது. தன் பூஜைக்கு இடையூறு வந்தால் அதைத் தானே களைந்து தன் பூஜையை நடத்திக் கொள்கிறான் ஸ்ரீராமன். எனக்கென்ன கவலை!" என்று கூறினார்.



உடனே எல்லோரும் ஸ்வாமிகளுக்கு தீங்கிழைத்தவனை தேடிப்பிடித்து தண்டிக்கவேண்டும் என்று கூறினர். ஸ்வாமிகள், ''போனால் போகிறான் விடுங்கள். தன் தவறை உணர்ந்து திருந்திவிட்டான்'' என்று சொல்லும்பொழுதே அவன் ஓடோடி வந்து ஸ்வாமிகள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். ஸ்வாமிகளும் அவனை மன்னித்து அருள் செய்தார்.

ஒரு வைசாக பௌர்ணமி தினம் காவேரி மடத்துப் படித்துறையில் ஜனஸமுத்ரம் திரண்டு வந்திருந்தது. ஸ்ரீஸ்வாமிகளும் அவரது சீடருமான ஸ்ரீஸுதீந்த்ரரும் காவிரிக்கு வந்து ஸ்நானம் செய்து, த்யானம் செய்து, தண்ட தீர்த்தம் அருளினார்கள். அப்போது ஸ்ரீஸ்வாமிகளின் உயிர் தோழரும் மஹாதேஜஸ்வியுமான ஸ்ரீ அப்பய்யதீக்ஷிதர் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்வாமிகளும், தீக்ஷிதரும் சிறிது நேரம் வேடிக்கையாக ஸ்லேடையில் உரையாடினார்கள். ஸ்வாமிகள் பூஜையை தொடங்கும் ஸமயம் தீடீரென சிறிது நேரம் நின்று எதிரில் தோன்றிய உருவத்துடன் பேசுவதுபோல் ''ஹூம்! ப்ராரப்தமே! வந்துவிட்டாயா? வா, கொடு, அனுபவிக்கிறேன். யாரை நீ விடுவாய்'' என்றார். ஜனங்களுக்கும், தீக்ஷிதருக்கும் ஒன்றும் விளங்கவில்லை.

தீக்ஷிதர் கேட்டுக்கொண்டதின் பேரில் ஸ்வாமிகள், ''என் எதிரே வந்தவன் ஜுரதேவதை. என் ப்ராரப்த கர்மாவின் பயனை அனுபவிக்க எனக்கு ஜுரம் கொடுத்துப்போனான்'' என்றார். சொல்லும்பொழுதே ஸ்வாமிகளுக்கு தாபஜ்வரம் கண்டு உடல் நடுங்க ஆரம்பித்தது. தீக்ஷிதர் ஆச்சர்யத்துடன், மஹான்களுக்குக் கூடவா ப்ராரப்தகர்மா பீடிக்கும்? இப்படியானால் தாங்கள் பூஜை, பாடம், ப்ரவசனம், வாதம், தர்மப்ரசாரம், பக்தஸம்ரக்ஷணை இத்யாதி கார்யங்களை எங்ஙனம் செய்யமுடியும் என வினவினார். அதற்கு ஸ்வாமிகள், திக்ஷிதரே! தாங்கள் கணபண்டிதர். ப்ராரப்த கர்மபலன் யாரையும்விடாது என தாங்கள் அறியீரா? ஸ்ரீ ஹரி, வாயு, குருக்களின் அனுக்ரஹத்தால், நான் என் கடமைகளை ஆற்றும் பொழுது இந்த ப்ராரப்தம் என்னைவிட்டு விலகி இருக்கும். நான் ஓய்வு எடுக்கும்பொழுது என்னை பீடிக்கும்'' என அந்த தாபஜ்வரத்திலும் தேஜஸ் குன்றாமல் பதிலுரைத்தார்.

இப்படி சொல்லிவிட்டு தன் காஷாய வஸ்த்ரத்தை எடுத்து எதிரில் எறிந்தார். உடனே ஜுரம், ஸ்வாமிகளை விட்டு காவி வஸ்த்ரத்தில் புகுந்தது. வஸ்த்ரம் நடுங்க ஆரம்பித்தது. ஸ்வாமிகள் மஹாபூஜையை முடித்து யாவர்க்கும் ப்ரஸாதம் தந்துவிட்டு மடத்துக்குச் சென்றார். இவற்றையெல்லாம் ஜனங்கள் ஆச்சர்யத்துடன் கண்ணுற்றனர். ஒருவர், ஸ்வாமிகளும் தீக்ஷிதரும் வேதாந்த தத்துவங்களில் நேர் எதிர் எதிர் கொள்கை உடையவர்களானாலும் எப்படி இப்படி அன்யோன்யமாக பழகுகிறார் என வினவினார்.

''வாதம் செய்யும் போது மட்டும் இருவரும் சிங்கங்கள் போல் மோதிக் கொள்வார்கள். மற்ற நேரத்தில் பாலும் நீரும்போல் நெருக்கமான நட்புடன் பழகுவார்கள். மதக் கொள்கை சொந்த அபிப்ராயம். அது நட்பை பாதிக்காது'' என்று சொன்னதும் சந்தோஷத்துடன் இருவரும் அமைதியாகச் சென்றனர்.

ப்ரதி வருஷம் விதரணையாக நடந்துவரும் ஸ்ரீராமநவமி, வஸந்த நவராத்திரி உத்ஸவம், மடத்தில் ஆரம்பமாயிற்று. வித்வான்கள் வருகை தந்திருந்தனர். அவர்களில் மதுரையிலிருந்து வந்த புகழ்பெற்ற வித்வான் ஸ்ரீ நரஸிம்ஹாசாரியாரும் ஒருவர். அவர் ப்ரசித்தி பெற்ற ஸ்ரீராகவேந்த்ர ஸ்வாமிகளின் அத்திம்பேரும் வித்யாகுருவும் ஆவார். அவர் வேங்கடநாதனையும் (ஸ்ரீராகவேந்த்ரரின் பூர்வாஶ்ரம பெயர் வேங்கடநாதன் ஆகும்) இந்த உத்ஸவத்திற்கு அழைத்து வந்திருந்தார். 97 வயது நிறைந்த ஸ்ரீ விஜயீந்த்ரஸ்வாமிகள் தம் கையாலேயே ஸ்ரீமூலராமனுக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்து பக்தர்களை ஆனந்தப்படுத்திக்கொண்டிருந்தார்.

இந்த ஸமயத்தில் ஸ்ரீ விஜயீந்த்ரர் தனிமையில் தனது ப்ரிய ஶிஷ்யர் ஸ்ரீஸுதீந்த்ரரிடம் கூறினார். ஸுதீந்த்ரரே! நம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீலக்ஷ்மிநரஸிம்ஹாசாரியார் தம்முடன் அழைத்து வந்திருக்கும் குழந்தை வேங்கடநாதனை கவனித்தீர்களா? முகத்தில் என்ன வித்யா களையும், வினயமும், தேஜஸ்ஸும் கொட்டுகிறது பார்த்தீர்களா? இவன் நம் ஆஸ்தான வித்வான் திம்மண்ணாவின் ஸத்புத்திரன் என்பதை மட்டும் நீங்கள் அறிவீர்கள். ஆனால் என்னுடைய குரு என்பதை அறிவீர்களா? என்றதும் ஸ்ரீ ஸுதீந்த்ரர் ஆச்சர்யத்தில் திடுக்கிட்டார்.

ஸ்ரீ விஜயீந்த்ரரே தொடர்ந்து பேசலுற்றார். ''கேளும் இந்த ரஹஸ்யத்தை. சுமார் 80 ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் என் குருமார்களான ஸ்ரீ வாதிவிஜயரும், ஸ்ரீ புரந்தரதாஸரும், ஸ்ரீ கனகதாஸரும் நானும் ஏகாந்தமாக அமர்ந்திருந்த நேரம். திடீரென்று என் குருநாதர் வ்யாஸராஜர் லேசாக சிரித்தார். அதன் பொருள் என்ன என்று கேட்டோம். அவர் தனக்கு மேலும் ஒரு அவதாரம் பாக்கியுள்ளது என்றும், அதிலும் தனக்கு பகவத் கைங்கர்யங்களைச் செய்து பக்தர்களை உத்தாரணம் செய்யவேண்டிய பொறுப்பு உள்ளது என்றும் சொன்னார். அதை நினைத்து சிரித்தேன் என்றார். இப்பொழுது வேங்கடநாதனைப் பார்த்தவுடன் அந்த நிகழ்ச்சி நினைவு வந்தது. என் ஞானத்ருஷ்டியால் என் குருநாதர் ஸ்ரீவ்யாஸராஜரின் அவதாரம்தான் இந்த வேங்கடநாதன் என்று அறிந்து கொண்டேன். தாங்கள் அவருக்கு ஆஶ்ரமம் கொடுத்து ஸ்ரீமடத்தை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள். இதுதான் என் கடைசி விருப்பம். என் குருநாதரை ஶிஷ்யராகப் பெறும் மஹாபாக்யம் பெற்று தாங்கள் பரமதன்யர் ஆனீர்'' என்றார்.

ஸ்ரீஸுதீந்த்ரர் பேரானந்தம் அடைந்தார். ''தன்யனானேன் குருதேவா! தங்கள் கட்டளையைத் தலையால் ஏற்றுக்கொண்டு நிறைவேற்றுகிறேன்'' என்று கூறினார். அந்த வேங்கடநாதனே இன்று உலகப் புகழ் பெற்றுத் திகழும் ஸ்ரீ ராகவேந்த்ரஸ்வாமிகள்.

பிறகு தன் நிர்யாண காலம் நெருங்கியதை உணர்ந்த ஸ்ரீ விஜயீந்த்ர ஸ்வாமிகள் தம் ப்ரிய ஶிஷ்யர் ஸ்ரீஸுதீந்த்ரரை ஸிம்ஹாஸனத்தில் அமரச் செய்து வேதாந்த ஸாம்ராஜ்யத்தில் தம் கையாலேயே நவரத்னாபிஷேகம் செய்து, ஜோடி ஶால்வை போர்த்தி ஸ்ரீமூலராமனின் பூஜைப்பெட்டி, பொக்கிஷத்தின் சாவி, அதிகார முத்திரை இவைகளை கையில் கொடுத்து, தமது அமிர்த ஹஸ்தத்தால் மஸ்தகத்தைத் தீண்டி வேதாந்த ஸாம்ராஜ்ய சக்ரவர்த்தியாய் நீடூழி வாழ்க என ஆசீர்வதித்து யானை மேல் அம்பாரி வைத்து வெகு விமரிசையாய் வீதி உலாவுக்கும் அனுப்பிவைத்தார். தஞ்சை மன்னர்கள் அதை முன்னின்று நடத்தினர்.

பிறகு எதிரில் இருந்த பக்தர்களுக்கு தர்மோபதேசம் செய்து தாம் புறப்படப் போவதாகவும் யாரும் கண்ணீர் விடவேண்டாம் என்றும் கூறி பத்மாசனத்தில் அமர்ந்து த்யானத்தில் ஆழ்ந்தார். அமைதியாக நாராயண நாமத்தை உச்சரித்துக் கொண்டே ஸமாதி நிலையை அடைந்தார். அவரது பொன் மேனியில் நூற்றுக்கணக்கான சூர்யர்கள் ஜ்வலிப்பது போல் ஒளி வீசியது. திடீரென்று ப்ரம்மமந்திரம் போதித்து ஒரு ஜோதி மேலே ஏறுவதை பக்தர்கள் கண்ணுற்றனர். அனைவரும் ஹா! ஹா! எனக் கதறினர். இவ்விதம் ஸ்வாமிகள் தனது ஆத்ம புஷ்பத்தை பரமனின் பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்து அஜேய விஜயீந்த்ரராகவே ஆனார். பக்தர்கள் காவிரிக்கரையிலுள்ள க்ஷேத்ரமூர்த்தியான ஸ்ரீ லக்ஷ்மீநாராயணன் ஸந்நிதியிலேயே அவருக்கு ப்ருந்தாவன ப்ரவேசம் செய்வித்தனர்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஸ்ரீஸுதீந்த்ரர் வீதி உலாவை பாதியிலேயே நிறுத்தி, மங்களாம்பிகை ஸந்நிதிக்கு ஓடோடி வந்து குழந்தைபோல கதறி அழுதார். மக்கள் ஸமாதானப்படுத்தின பிறகு ஸமாதி ஸமீபம் வந்து ஆராதனைகளை நடத்தினார்.

இன்றும் ஸ்ரீ விஜயீந்த்ரஸ்வாமிகள், ப்ருந்தாவனத்தில் எழுந்தருளியிருந்து பக்தர்களுக்கு ஸர்வ மங்களங்களையும் அருட்பாலித்துக்கொண்டு வருகிறார். ஸ்ரீ விஜயீந்திர ஸ்வாமிகளின் திவ்யசரித்ரம் நிறைவுபெற்றது.

***(இனி வரும் இதழ்களில் வசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த ஸ்ரீ ராமானுஜரின் திவ்ய சரித்ரத்தை அனுபவிப்போம்.)***

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**



# மஹாபாரதக் கதைகள்

பீஷ்மரிடம், "சரணம் என்று தன்னை அடைந்தவனிடம் ஒருவன் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?" என்று கேட்டார் தர்மபுத்திரர். "சரணம் என்று வந்தவனைக் காப்பாற்றுவது மிகச்சிறந்த தர்மம். முன்பு ஶுக்ராச்சாரியாரால் ஒரு அரசனுக்குக் கூறப்பட்ட கதையைச் சொல்கிறேன். இதைக் கேட்பதால், பொருள் விளங்குவது மட்டுமல்ல, எல்லாவிதமான பாவங்களும் நீங்கும் என்றும் கூறப்படுகிறது" என்று ஆரம்பித்த பீஷ்மர், ஶுக்ராச்சாரியார் கூறிய அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

"ஒரு காட்டில் மிகவும் பயங்கரமான ஒரு வேடன் இருந்தான். அவன் எந்தக் கொடுமையையும் செய்ய அஞ்சாதவன். ஒரு முறை, அந்தக் காட்டில் ஏற்பட்ட பெரும் சுழற்காற்றில் சிக்கிக்கொண்டான். என்ன செய்வது என்று தெரியாமல், அந்த வேடனும் இங்கும், அங்கும் ஓடினான். அப்பொழுது ஒரு பெண் புறாவைக் கண்டான். தன் கையில் வைத்திருந்த கூண்டினுள் அந்த பெண் புறாவை பிடித்து அடைத்தான். அதன் பின்னர் மேலும் அவன் வனத்தில் திரிந்தபொழுது, ஒரு பெரும் மரத்தை கண்டான். புயற்காற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அந்த மரத்தின் அடியே சிறந்த இடம் என்று நினைத்தான். அன்றிரவு அங்கேயே தங்குவது என்று தீர்மானித்த அவன், இந்த மரத்தையும் இதிலுள்ள எல்லாவற்றையும் சரணடைகிறேன் என்று கூறிக்கொண்டே படுத்தான்.

அந்த மரத்தின் ஒரு கிளையில் வாழ்ந்து கொண்டிருந்த ஆண் புறா, தன்னுடைய மனைவியாகிய பெண் புறா இன்னமும் வந்து சேராததை நினைத்து மனக்கவலை கொண்டது. "என் மனைவி இன்னமும் திரும்பாமலிருப்பதற்கு என்ன காரணம்? இந்த புயலில் எங்கே அவள் சிக்கிக் கொண்டாளோ? என் மனைவியைக் காணாமல் வாழ்வதில் அர்த்தமில்லை" என்று புலம்பியது.

இப்படிப் புலம்பிய ஆண் புறாவினுடைய வார்த்தைகளை மரத்தினடியில் வேடன் வைத்திருந்த கூண்டில் அடைக்கப்பட்டிருந்த பெண் புறா கேட்டது. "என் மீது பெரும் அன்பு வைத்திருக்கும் என் கணவர் என்னைக் காணாமல் கவலைப்படுவதை எப்படி சகிப்பது?" என்று அந்த பெண் புறா சிந்தித்தது. பிறகு கூண்டினுள் இருந்தே ஆண் புறாவைப் பார்த்து, ஒரு சில வார்த்தைகளைக் கூறியது.

'நான் இங்குதான் இருக்கிறேன். என்னைப் பிடித்திருக்கும் வேடன் மீது நீ கோபம் கொள்ளாதே. நீ இருக்கும் இடம், இந்த மரம். இந்தப் புயலிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள இந்த வேடன் இந்த மரத்தையே சரணம் என்று அடைந்திருக்கிறான். சரணம் அடைந்தவர்களைக் காப்பாற்றுவது தான் தர்மம். ஆகையால், இப்பொழுது உன்னுடைய முதல் கடமை இந்த வேடனைக் காப்பாற்றுவதுதான்' என்று கூறியது.

மரத்தின் மேல் இருந்த ஆண் புறா, தன் மனைவி கூறிய தர்மத்தை ஏற்று, வேடனைப் பார்த்து, "நான் இருக்கும் இடத்தை சரணம் என்று அண்டியவன் நீ. அதனால் என் வீட்டை அடைந்தவனாகிறாய்! அக்காரணம் கொண்டு உனக்கு வேண்டியதைச்செய்ய நான் கடமைப்பட்டவனாகிறேன். என் மனைவியைப் பிடித்து வைத்திருப்பதால் நீ எனக்குப் பகைவனானாலும், சரணம் அடைந்த உனக்குத் தேவையானதைச் செய்வதே எனது தர்மம். மரத்தை வெட்ட வருகிறவனுக்கும், மரம் தனது நிழலை அளிக்கிறது. அதுபோல், உனக்கு வேண்டியதைச் செய்ய, இப்போது நான் தயாராக இருக்கிறேன். உனக்கு என்ன வேண்டும் சொல்?" என்று கேட்டது.

வேடன், குளிர்காய நெருப்பு கேட்டான். ஆண் புறா பல இலைச் சருகுகளை அவன் பக்கம் தள்ளியது. பிறகு பறந்து சென்று ஒரு கருமான் வீட்டில் எரிந்து கொண்டிருந்த நெருப்புக் கட்டை ஒன்றைக் கொண்டு வந்து, அவனுக்குத் தீ மூட்டிக்கொடுத்தது. குளிர் காய்ந்த அந்த வேடன், தனக்குப் பசி ஏற்பட்டுள்ளதாகக் கூறினான். தன்னிடம் எந்த உணவும் இல்லையே என்று யோசித்த புறா, தான் மூட்டிய தீயில் தானே விழுந்தது. தன்னையே அவனுக்கு உணவாக்கியது!

இதைக் கண்ட வேடன், மனம் திருந்தினான். மிகவும் கெட்ட புத்தியுடன் தீமை புரிந்து கொண்டிருந்த தன்னுடைய பசியைப் போக்க இந்தப் புறா தன்னைத் தானே பலி கொடுத்த நிகழ்ச்சி, அவன் மனதில் பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. இனி எந்த ஜீவராசிக்கும் எந்தத் தீமையையும் செய்வதில்லை என்ற மன உறுதியோடு அவன் கூண்டில் அடைபட்டிருந்த பெண் புறாவை விடுவித்தான்.

அந்தப் பெண் புறா, கணவன் தீயில் விழுந்த துக்கத்தைத் தாங்காமல் தானும் தீயில் விழுந்தது. அப்பொழுது வானிலிருந்து அழகிய விமானம் ஒன்று வந்து இறங்கியது. அதில் ஆண் புறா நன்றாக அலங்கரிக்கப்பட்டு அமர்ந்திருந்தது. அந்த பெண் புறாவும் விமானத்தை அடைந்தது. இரண்டு புறாக்களையும் ஏற்றிக்கொண்டு அந்த விமானம் சொர்க்கத்திற்குச் சென்றது.

இந்த காட்சிகளை கண்ட வேடன் ப்ரமித்து நின்றான். அவனை விட்டு எல்லா ஆசைகளும் அகன்றன. அவனும் பெரிய தீயை உண்டாக்கி அதில் குதித்தான். அவன் மட்டுமல்லாமல் அவன் செய்த பாவங்களும் எரிந்தன. அவனும் சொர்க்கத்தை அடைந்தான்.''

சரணம் அடைந்தவனை எந்த த்யாகம் செய்தாவது காப்பாற்ற வேண்டும் என்பதையும், கணவனுக்கு மகிழ்ச்சி உண்டாக்குவதே பெண்ணின் முதல் கடமை என்பதையும், மனம் திருந்தியவர்கள் நற்கதி அடைவார்கள் என்பதையும் இந்த கதை தெரிவிக்கிறது. இந்தக் கதையைக் கேட்பவர்கள் புண்ணியம் அடைவார்கள் என்றும் கூறி முடித்தார் பீஷ்மர். ■

---


ஸ்ரீ ஹரி:

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.

**பகவந்நாம ஸங்கீர்த்தன மேளா**

(நாம ஸப்தாஹம்)

நிகழும் பஹுதான்ய வருஷம் தை மாதம் 23-ந் தேதி முதல் தை மாதம் 29-ந் தேதி வரை (06-02-99 முதல் 12-02-99 வரை) ரஸிக ரஞ்சனி ஸபா (R.R. ஸபா) மைலாப்பூர், சென்னை - 600 004ல், காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அகண்ட

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

நாம ஸங்கீர்த்தனம் பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் முன்னிலையில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபையால் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொண்டு ஸர்வ நன்மைகளையும் அடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.

- நிர்வாகிகள்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 15

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

ஒரு ஸமயம், ஒருவனுக்கு இறைவனைக் காணவேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. அதற்காக வனத்திற்குச் சென்று, பல காலம் தவமியற்றினான். அவனுடைய தவத்தினால் ஸந்தோஷமடைந்த இறைவன் அவன்முன் தோன்றினார். இறைவன் அவனைப் பார்த்து, "உன்னுடைய பக்தியால் மிகவும் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு யாது வரம் வேண்டும்?" என்று வினவினார். அந்த பக்தனும், தான் ஸ்வர்க்கம், நரகம் இவை இரண்டையும் நேரில் தரிசிக்க ஆவல் கொண்டுள்ளதாக கூறி, தன்னுடைய ஆசையைப் பூர்த்தி செய்விக்கும்படி இறைவனிடம் ப்ரார்த்தித்தான்.

இறைவன், தன்னுடன் அவனை முதலில் நரகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு உண்பதற்கு விதவிதமான பதார்த்தங்கள் இருந்தன. ஆனால், அனைவரும் ஒரே அழுகையும், கூச்சலும் போட்டுக்கொண்டு துக்கமயமாக காணப்பட்டனர். அவர்களுடைய ஒவ்வொரு கையிலும் கையை மடக்கமுடியாதபடி ஒரு மிகப்பெரிய கரண்டி கட்டப்பட்டு இருந்தது. ஆகவே கிடைத்த உணவுப் பொருட்களை, அவர்களால் வாயில் எடுத்து போட்டுக்கொள்ள முடியவில்லை. நேரடியாக வாயினால் யாரும் சாப்பிடக்கூடாது என்ற கட்டளையும் அங்கு இருந்தது. ஆகவே, எல்லா பதார்த்தங்கள் இருந்தும், அவர்கள் அனுபவிக்கமுடியாமல் துக்கப்பட்டுக் கொண்டு இருந்தனர்.

உடனே அந்த பக்தன் தன்னை ஸ்வர்க்கத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கூறினான். ஸ்வர்க்கத்திற்குள் நுழையும்பொழுதே அங்குள்ள அனைவரும் ஆடல், பாடல்களில் ஈடுபட்டுக்கொண்டு மிகவும் ஸந்தோஷமாக இருந்தனர். ஆனால், என்ன ஆச்சரியம்? அவர்களுடைய கைகளிலும் மிகப்பெரிய கரண்டி. நரகத்தில் உள்ளவர்களுக்குப் போன்றே இவர்கள் கையிலும் கட்டப்பட்டு இருந்தது. இறைவனிடம் அவன் "இவர்கள் எப்படி ஸந்தோஷமாக உள்ளனர்?". என்று வினவினான்.



இறைவன், சிறிது நேரம் கழித்துப்பார் என்றார். அவர்கள் சாப்பிடும் நேரம் வந்தபொழுது தன் கைகளில் கட்டியுள்ள கரண்டிகளால் ஆஹாரத்தை எடுத்து, ஒருவர் மற்றொருவருக்கு ஊட்டிவிட்டனர். இப்படி பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்துகொண்டனர். அவர்கள் ஸந்தோஷமாக உள்ளனர். ஆனால் பரஸ்பர உதவி செய்யும் மனப்பான்மை இல்லாததால் நரகத்தில் உள்ளவர்கள் கஷ்டப்படுகின்றனர்.

''நாம் ஒற்றுமையுடன் வாழவேண்டும். முடிந்த போதெல்லாம், முடிந்த வழிகளில் எல்லாம் பிறருக்கு உதவி செய்யவேண்டும். பிறருக்கு நாம் செய்யும் உதவிகளும், தர்மங்களும், நாம், நமக்கே செய்து கொள்வதாகும்'' என்று இறைவன் அந்த பக்தனுக்கு எடுத்துரைத்தார். தானும் அப்படியே வாழ்வதாக உறுதி கூறி, பல காலம் பூமியில் நல்ல காரியங்கள் செய்து, அந்த பக்தனும் இறைவனை அடைந்தான்.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 42

இறைவனின் அருளை முழுமையாக அடைந்தவர்களிடத்தில் காமம், கோபம், பயம் இவைகள் மூன்றும் அறவே காணப்படாது. இதுவே, இறைவனின் அருளை அடைந்ததற்கான அடையாளம். இறைவனின் அருளை அடைந்தவர்களே இப்படி ஆகிவிடுவார்களாயின் இறைவன் எப்பேர்ப்பட்டவனாக இருக்கவேண்டும்.

அத்வைத மதத்தின்படி பசு, பன்றி முதற்கொண்டு உலகத்தில் உள்ள அனைத்தும் ஈஶ்வர ஸ்வரூபமே. அப்படியிருக்கையில், நாம் ஒரு ஞானியையோ, தெய்வத்தையோ த்யானிக்கவேண்டிய அவஶ்யம் என்ன? வேதங்கள்கூட தாயை தெய்வமாக வணங்கு! தந்தையை தெய்வமாக வணங்கு! என்றுதானே கூறுகின்றது. நாமும் நம்முடைய மாதா பிதாக்களையே த்யானிக்கலாமே! அல்லது நமக்கு பிடித்த ஒருவரைக்கூடத் த்யானிக்கலாமே என்று சிலர் கேட்பார்கள்.

அனுபவத்தில் எல்லோரும் ஒன்று, எல்லாம் ஒன்று என்பது உண்மையானாலும் வ்யவஹாரத்தில் அப்படியில்லை. மேலும் உபாஸனை, த்யானத்தில் எந்த ஒரு விஷயத்தை ஸதா சிந்திக்கின்றோமோ அந்த வஸ்துவாகவே ஆகிவிடுவோம். அந்த ஸ்வரூபத்தின் குணங்கள் நம்மிடம் வந்துவிடும். ஆகவே, வ்யவஹாரத்தில் ஞானிகளைத் தவிர மற்ற எல்லோரும் சோக மோஹாதிகளுக்கு வசப்பட்டு இருக்கின்றனர். ஆகவே அவர்களை உபாஸித்தால் அவர்களுடைய குணங்களே நம்மை வந்துசேரும். ஆகவே நாம் உபாஸிக்கக்கூடிய ஸ்வாமி பூர்ணமான ப்ரஹ்மஸ்வரூபமாக இருக்கவேண்டும். அருணாசலேஶ்வரர்தான் அப்பேர்ப்பட்ட ஸ்வாமி.

*'கோபமில் குணத்தோய் குறியாய் எனக் கொள*
*குறையென் செய்தேன்'*

நான் உன்னுடைய குழந்தை. நீயோ கோபமே வராத என்னுடைய தந்தை. உன்னை இப்படி பலவாறாகத் துதித்தும், கதறி அழுதும், நீ எனக்கு அருள்செய்யாது இருப்பதைப் பார்த்தால் நீ என்னுடைய விஷயத்தில் ஏதாவது கோபம் கொண்டுள்ளாயோ என்று தோன்றுகின்றது.

கோபமே வராத உந்தனுக்கு என் மேல் கோபம் இருக்குமானால் நான் செய்த தவறு அப்பேர்ப்பட்டதாகத்தான் இருக்கவேண்டும். அறியாமையால் நான் தவறு செய்திருக்கலாம். உலகத்தில் அன்பில்லாத குழந்தைகள் உண்டு. அன்பில்லாத பெற்றோர்கள் இல்லையல்லவா! என்னுடைய தவறைக் களைந்து, என்னை ஏற்றுக்கொண்டு, எனக்கு அருள் செய்யவேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

மற்றொரு பாவத்தில் பார்த்தோமானால், கோபமில்லாத அருணாசலேஶ்வரா, லோகத்தில் எத்தனையோ பக்தர்கள் உன்னுடைய அருளுக்காக ஏங்கி, பலவிதமான உபாஸனைகளில் ஈடுபட்டு தவம் இருக்க, என்னை வந்து ஆட்கொண்டாயே. இதற்கு நான் செய்த குறைதான் (தவம்) என்ன? என்கிறார்.

*தமிழில், குறை என்பதற்கு தவம் என்ற பொருளும் உண்டு.*

(தொடரும்)

தொகுப்பு : **முரளீதரதாஸன்**

## செய்திகள்

### டிசம்பர் 16-ந் தேதி முதல் ஜனவரி 14-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில், *'தனுர்மாத பூஜை'* நடைபெற்றது.

### டிசம்பர் 27-ந் தேதி

ஸ்ரீ ஸ்வாமிகள் ஆக்ஞையின்பேரில் (நாமஸங்கீர்த்தன குழுவினர்) திருநின்றவூர் ஸ்ரீ பக்தவத்சல பெருமாள் கோவிலுக்குச் சென்று நாம ஸங்கீர்த்தனம் செய்தார்கள்.

### டிசம்பர் 29-ந் தேதி - வைகுண்ட ஏகாதஶீ

சென்னை ப்ரேமிகபவனத்தில் பரமபதவாசல் திறப்பு நடைபெற்றது. மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதமூர்த்தி கருடஸேவை ஸாதித்தருளினார். பிறகு கருடவாஹனத்தில் நகர ஸங்கீர்த்தனத்துடன் புறப்பாடு கண்டருளினார்.காலையில் பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது.

தி.நகர் - பாண்டி பஜார், புவனேஸ்வரி கல்யாணமண்டபத்தில் நம் மிஷன் காலையில் அஷ்டபதி பஜனையும் இரவில் திவ்யநாம பஜனையும் விடிய விடிய நடைபெற்றது.

### டிசம்பர் 31-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில், க்ருத்திகா மண்டல கண பாராயணம் நடைபெற்றது.

### ஜனவரி 1-ந் தேதி - ராதா கல்யாணம்

சென்னை ப்ரேமிகபவனத்தில், *'ராதா கல்யாணம்'* நடைபெற்றது. இரவில் திவ்யநாம பஜனை நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிகள் க்ருத்திகா மண்டல கண பாராயண பூர்த்தி வைபவங்களில் கலந்து கொண்டார்.

### ஜனவரி 3-ந் தேதி

நம் ஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் நாமஸங்கீர்த்தன குழுவினர் திருநீர்மலைக்குச் சென்று நாமஸங்கீர்த்தனம் செய்தனர். சென்னை ஆழ்வார்பேட்டை ரமணகேந்த்ராவில் நடைபெற்ற *'ஸ்ரீ ரமண ஜயந்தி'* நிகழ்ச்சிகளில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### ஜனவரி 6,7 தேதிகள் மற்றும் 9-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை

மும்பை, மாதுங்கா, ஸௌத் இந்தியன் பஜன் சமாஜில், ஸ்ரீ ஸ்வாமிகள் "பக்த சரித்ரம்" உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### ஜனவரி 21-ந் தேதி

சென்னையிலிருந்து வெளிவரும் 'HRD Times' Management Magazine வெளியீட்டு விழாவில், ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டு, முதல் இதழை வெளியிட எழுத்தாளர் ஸ்ரீ பாலகுமரன் அதைப் பெற்றுக்கொண்டார்.

## நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### பிப்ரவரி 3-ந் தேதி முதல் 8-ந் தேதி வரை

சென்னை மேற்கு மாம்பலம், அயோத்யா மண்டபத்தில் நடைபெறும் மஹாஶிவராத்ரி வைபவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

### பிப்ரவரி 14-ந் தேதி மஹாஶிவராத்ரி

வடவாம்பலம் ஸ்ரீ ஆத்ம போதேந்த்ராள் அதிஷ்டானத்தில் நம் மிஷன் சார்பில் பூஜை - ஐந்து கால அபிஷேகம், ஆராதனை, பூஜை நடைபெறும்.

### பிப்ரவரி 26-ந் தேதி முதல் மார்ச் 13-ந் தேதி வரை

ஸ்ரீ ஸ்வாமிகள், பக்தர்களுடன் பஞ்சதுவாரகைக்கு செல்ல இருக்கிறார்கள்.

மங்களானி பவந்து


# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/MS(S)/714/99/
WPP No. TN/MS(S)/54/99

| வேணு : 4 | பிப்ரவரி 1999 | கானம் : 7 |
| --- | --- | --- |

வைகுண்ட ஏகாதஸீ அன்று
மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் கருடஸேவை.


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar